## சார்பு நீதிமன்றம், அவிநாசி,

**முன்னிலை** : திரு K. சுரேஷ்குமார், B.A.,B.L.,
சார்பு நீதிபதி, அவிநாசி.

2023 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 31–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம், பங்குனி மாதம் 17–ஆம் நாள்)

**இந்து திருமண அசல் மனு எண். 106/2022**

எஸ்.விஜயராகவன் ... மனுதாரர்

/எதிராக/

கவிதா ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 27.09.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 30.03.2023 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் அவரை பொறுத்து தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

### உத்தரவு

கடந்த 03.11.2019–ஆம் தேதியில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணத்தை இரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்திரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு இந்து திருமணச்சட்டப்பிரிவு 13 (i–a) (1–b)–ன் கீழ் 16.09.2022–ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்</u> :

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இந்துகுல வழக்கப்படி கடந்த 03.11.2019–ஆம் தேதியன்று, திருப்பூர், திருமுருகன்பூண்டி, திருமுருகநாதன் திருக்கோயிலில் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. மனுதாரரின் திருமண வாழ்க்கை ஒரு கெட்ட கனவாக மாறிவிட்டது. எதிர்மனுதாரர் மனுதாரருடன் எவ்விதத்திலும் ஒத்துழைக்கவில்லை. எதிர்மனுதாரர் மனுதாரருடன் இல்லற வாழ்வில் ஈடுபடவில்லை. எதிர்மனுதாரரை, மனுதாரர் ஒரு மகப்பேறு மருத்துவரிடம் அழைத்துச்சென்று பரிசோதனை செய்த பின்னிட்டு, ஒருசில மாத்திரைகளை பரிந்துரைத்தார். அதன் விளைவாக எதிர்மனுதாரர் ஒருசில தினங்கள் மட்டும் இல்லற வாழ்விற்கு ஒத்துழைத்தார். எதிர்மனுதாரர் மூச்சுதிணரல் மற்றம வயிற்று வலி இருப்பதாக கூறி வந்தார். எனவே அதற்காக அவர் தாயார் ஊருக்கு சென்று அங்கிருந்து சிகிச்சை பெற்றார். அப்போது எதிர்மனுதாரருக்கு கர்ப்ப பையிலும், அதற்கு வெளியிலும் கட்டி இருப்பதாக கூறியதால், அதற்குண்டான வைத்திய செலவு அதிகம் என்பதால், மனுதாரரே அதற்குண்டான செலவுகள் அனைத்தையும் செய்தார். எதிர்மனுதாரருக்கு கர்ப்ப பை கட்டி காரணமாக அவருக்கு குழந்தை பெறும் வாய்ப்பு இல்லை. எதிர்மனுதாரர் அவரது தாயாரின் சொல் பேச்சை கேட்டு நடந்து வந்தார். எதிர்மனுதாரரின் உடல்நிலையினை கருத்தில்கொண்டு கடந்த 30.09.2020–ஆம் தேதியன்று திருப்பூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக எதிர்மனுவாதியை அழைத்துச்சென்றார். அங்கு அவருக்கு அளித்த சிகிச்சையினை சரியான முறையில் எதிர்மனுதாரர் பின்பற்றவில்லை. மேற்படி சிகிச்சைக்கு மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ரூ.2,00,000/– செலவு செய்தார். எதிர்மனுதாரர் அவரது தாயாரின் பேச்சை கேட்டுக்கொண்டு சரியானபடி மருத்தவ அறிவுரைகளை பின்பற்றாமல் இருந்துவிட்டார். எதிர்மனுதாரர் திருமணம் ஆன ஆரம்பம் முதலே

அவரது தாயார் வீட்டில் தங்கி இருப்பதையே வாடிக்கையாக கொண்டிருந்தார். எதிர்மனுதாரர் பலமுறை சென்று அழைத்தும், எதிர்மனுதாரர் அவரது தாயார் பேச்சை கேட்டுக்கொண்டு மனுதாரருடன் வர மறுத்துவிட்டார். எதிர்மனுதாரரின் தாயாரும் மனுதாரரை தரக்குறைவாக நடத்தினார். பின்னிட்டு, மனுதாரர் கடந்த 23.06.2022 அன்று விவாகரத்து கேட்டு அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் பதில் எதுவும் அனுப்பவில்லை.

மேலும், எதிர்மனுதாரர் கடந்த 28.06.2022 அன்று கரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பொய்யான தகவலினை கூறி பிராது ஒன்றினை கூறினார். மேற்படி புகாரின் பேரில் காவல் நிலையத்தார் மனுதாரரை காவல்நிலையத்தில் ஆஜராகும்படி அறிவுறுத்தினார்கள். மனுதாரரால் போக இயலவில்லை. ஆதலால், மறுநாள் 30.06.2022 தேதியன்று மனுதாரர் அவரது தகப்பானர் மற்றும் நண்பர்களுடன் ஆஜரானார். மேற்படி தேதியிலேயே மனுதாரரும், எதிர்மனுதாரரும் முறைப்படி பரஸ்பரம் ஒப்புகை விவாகரத்து மனு கரூர் குடும்ப நல நீதிமன்றத்தில் கொடுப்பது என்றும், மேற்படி எதிர்மனுதாரருக்கு சேர்ந்த ஆடை, அணிகலன்கள் மற்றும் சீர்வரிசைகள் ஆகியனவற்றை 02.07.2022 தேதியன்று கரூரில் அவருக்கு திருப்பி தர வேண்டியது என்ற ஒரு முச்சலிக்காவை காவல்துறையினர் எழுதி வாங்கிக்கொண்டு மனுதாரரை அனுப்பி வைத்தனர். பின்னிட்டு 06.07.2022 தேதியன்று எதிர்மனுதாரருக்கு சேர வேண்டிய அனைத்துப் பொருட்களையும் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கொடுத்துவிட்டார். அதற்கான ஒரு இரசீதும் பெற்றுக்கொண்டார். பின்னிட்டும், எதிர்மனுதாரர் பரஸ்பர விவாகரத்திற்கு மனு தாக்கல் செய்ய வரவில்லை என்பதால் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் அவர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்.

4) <u>பிரச்சனை</u>

மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5) மனுதாரர் தரப்பில், மனுதாரர் விஜயராகவன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், மேலும் மனுதாரரின் தகப்பனார் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.1ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>பிரச்சனைக்கான தீர்வு :</u>

கடந்த 03.11.2019—ஆம் தேதியில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணத்தை இரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்திரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு இந்து திருமணச்சட்டப்பிரிவு 13 (i—a)—ன் கீழ் 16.09.2022—ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில், தனக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 03.11.2019—ஆம் தேதியன்று, திருப்பூர், திருமுருகன்பூண்டி, திருமுருகநாதன் திருக்கோயிலில் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்றும், மனுதாரரின் திருமண வாழ்க்கை ஒரு கெட்ட கனவாக மாறிவிட்டது என்றும், எதிர்மனுதாரர் தன்னுடன் எவ்விதத்திலும் ஒத்துழைக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் தன்னுடன் இல்லற வாழ்வில் ஈடுபடவில்லை என்றும், எதிர்மனுதாரரை, தான் ஒரு மகப்பேறு மருத்துவரிடம் அழைத்துச்சென்று பரிசோதனை செய்த பின்னிட்டு, ஒருசில மாத்திரைகளை பரிந்துரைத்ததாகவும், அதன் விளைவாக எதிர்மனுதாரர் ஒருசில தினங்கள் மட்டும் இல்லற வாழ்விற்கு ஒத்துழைத்ததாகவும், பின்னிட்டு எதிர்மனுதாரர் மூச்சுதிணரல் மற்றம வயிற்று வலி இருப்பதாக கூறி, அதற்காக அவர் தாயார் ஊருக்கு சென்று அங்கிருந்து சிகிச்சை பெற்றதாகவும், அப்போது எதிர்மனுதாரருக்கு கர்ப்ப பையிலும், அதற்கு

வெளியிலும் கட்டி இருப்பதாக கூறியதால், அதற்குண்டான வைத்திய செலவு அதிகம் என்பதால், தானே அதற்குண்டான செலவுகள் அனைத்தையும் செய்ததாகவும், எதிர்மனுதாரருக்கு கர்ப்ப பை கட்டி காரணமாக அவருக்கு குழந்தை பெறும் வாய்ப்பு இல்லை என்றும், எதிர்மனுதாரர் அவரது தாயாரின் சொல் பேச்சை கேட்டு நடந்து வந்ததாகவும், எதிர்மனுதாரரின் உடல்நிலையினை கருத்தில்கொண்டு கடந்த 30.09.2020–ஆம் தேதியன்று திருப்பூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக எதிர்மனுதாரரை அழைத்துச்சென்றதாகவும், அங்கு அவருக்கு அளித்த சிகிச்சையினை சரியான முறையில் எதிர்மனுதாரர் பின்பற்றவில்லை என்றும், மேற்படி சிகிச்சைக்கு தான், எதிர்மனுதாரருக்கு ரூ.2,00,000/– செலவு செய்ததாகவும், எதிர்மனுதாரர் அவரது தாயாரின் பேச்சை கேட்டுக்கொண்டு சரியானபடி மருத்தவ அறிவுரைகளை பின்பற்றாமல் இருந்துவிட்டதாகவும், எதிர்மனுதாரர் திருமணம் ஆன ஆரம்பம் முதலே அவரது தாயார் வீட்டில் தங்கி இருப்பதையே வாடிக்கையாக கொண்டிருந்ததாகவும், எதிர்மனுதாரர் பலமுறை சென்று அழைத்தும், எதிர்மனுதாரர் அவரது தாயார் பேச்சை கேட்டுக்கொண்டு தன்னுடன் வர மறுத்துவிட்டார் என்றும், எதிர்மனுதாரரின் தாயாரும் தன்னை தரக்குறைவாக நடத்தினார் என்றும், பின்னிட்டு, தான் கடந்த 23.06.2022 அன்று விவாகரத்து கேட்டு அறிவிப்பு ஒன்றை அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் பதில் எதுவும் அனுப்பவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

மேலும், எதிர்மனுதாரர் கடந்த 28.06.2022 அன்று கரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பொய்யான தகவலினை கூறி பிராது ஒன்றினை கூறியதாகவும், மேற்படி புகாரின் பேரில் காவல் நிலையத்தார் தன்னை காவல்நிலையத்தில் மேற்படி தேதியிலேயே ஆஜராகும்படி அறிவுறுத்தினார்கள் என்றும், தன்னால் போக இயலவில்லை என்றும், ஆதலால், மறுநாள் 30.06.2022

தேதியன்று தான் தனது தகப்பானர் மற்றும் நண்பர்களுடன் ஆஜராகி, மேற்படி தேதியிலேயே தானும், எதிர்மனுதாரரும் முறைப்படி பரஸ்பரம் ஒப்புகை விவாகரத்து மனு கரூர் குடும்ப நல நீதிமன்றத்தில் கொடுப்பது என்றும், மேற்படி எதிர்மனுதாரருக்கு சேர்ந்த ஆடை, அணிகலன்கள் மற்றும் சீர்வரிசைகள் ஆகியவற்றை 02.07.2022 தேதியன்று கரூரில் அவருக்கு திருப்பி தர வேண்டியது என்ற ஒரு முச்சலிக்காவை காவல்துறையினர் எழுதி வாங்கிக்கொண்டு தன்னை அனுப்பி வைத்ததாகவும், பின்னிட்டு 06.07.2022 தேதியன்று எதிர்மனுதாரருக்கு சேர வேண்டிய அனைத்துப் பொருட்களையும் தான் எதிர்மனுதாரருக்கு கொடுத்துவிட்டதாகவும், அதற்கான ஒரு இரசீதும் பெற்றுக்கொண்டதாகவும், பின்னிட்டும், எதிர்மனுதாரர் பரஸ்பர விவாகரத்திற்கு மனு தாக்கல் செய்ய வரவில்லை என்பதால் தான் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளாக சாட்சியமளித்துள்ளார்.

**7)** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கும் இடையே இந்துகுல வழக்கப்படி கடந்த 03.11.2019–ஆம் தேதியன்று, திருப்பூர், திருமுருகன்பூண்டி, திருமுருகநாதன் திருக்கோயிலில் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்பது குறித்து ம.சா.ஆ.1 திருமண அழைப்பிதழ் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரரின் மருத்துவ அறிக்கை ம.சா.ஆ.2, மருத்துவ பில்கள் ம.சா.ஆ.3, எதிர்மனுதாரருக்கு மனுதாரர் அனுப்பிய அறிவிப்பு ம.சா.ஆ.4, எதிர்மனுதாரரின் அஞ்சலக ஒப்புகை அட்டை ம.சா.ஆ.5, கரூர், அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு இரசீது ம.சா.ஆ.6, எதிர்மனுதாரர், மனுதாரர் மீது காவல்நிலையத்தில் கொடுத்த புகார் ம.சா.ஆ.7, பொருட்களின் இரசீது ம.சா.ஆ.8, எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த முச்சலிக்கா ம.சா.ஆ.9, கரூர் கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சம்மன் (4 எண்ணிக்கைகள்) ம.சா.ஆ.10 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் மனுதாரருடன் இல்லற வாழ்வில் ஈடுபட மறுத்துவிட்டதாகவும், எதிர்மனுதாரர் அவரது தாயாரின் பேச்சை கேட்டு நடந்துகொண்டதாகவும், எதிர்மனுதாரர் அவரது தாயார் வீட்டிலேயே தங்கி இருந்ததாகவும், எதிர்மனுதாரருக்கு சேர வேண்டிய அனைத்து பொருட்களையும் கொடுத்துவிட்டதாகவும், மனுதாரர், எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்தவகையில், எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மன ரீதியாக கொடுமை இழைத்துள்ளார் என்பதை இந்நீதிமன்றதினால் அறிய முடிகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையாகி வழக்கை நடத்த முன்வராமல் தோன்றாத்தரப்பினராக இருந்து வருகிறார்.

8) மேலும் மனுதாரர் தரப்பில், மனுதாரரின் தகப்பனார் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியமும், ம.சா.1ன் சாட்சியத்தை ஒத்தே அமைந்துள்ளது. ம.சா.1 மற்றும் ம.சா.2 அளித்த சாட்சியத்தில் இருந்தும், எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக இருந்து வருவதில் இருந்தும், மனுவில் உள்ள சங்கதிகள் மனுதாரர் தரப்பில் தகுந்த முறையில் நிரூபிக்கப்பட்டதாகவும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு, 03.11.2019–ஆம் தேதி மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

செலவுத்தொகை ஏதுமில்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 31–ஆம் நாள் என்னால்

கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K SURESH KUMAR Digitally signed by K SURESH KUMAR Date: 2023.03.31 19:15:53 +0530

சார்பு நீதிபதி,
அவிநாசி.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :**

ம.சா.1 விஜயராகவன்

ம.சா.2 சுரேஷ்

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 03.11.2019 | திருமண அழைப்பிதழ் – அசல் |
| ம.சா.ஆ.2 | 30.09.2020 | எதிர்மனுதாரரின் மருத்துவ அறிக்கை – அசல் |
| ம.சா.ஆ.3 | -- | மருத்துவ பில்கள் – அசல் |
| ம.சா.ஆ.4 | 23.06.2022 | மனுதாரர், எதிர்மனுதாரருக்கு மனுதாரர் அனுப்பிய அறிவிப்பு – அலுவலக நகல் |
| ம.சா.ஆ.5 | -- | எதிர்மனுதாரரின் அஞ்சலக ஒப்புகை அட்டை – அசல் |
| ம.சா.ஆ.6 | 28.06.2022 | கரூர், அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு இரசீது – அசல் |
| ம.சா.ஆ.7 | 28.06.2022 | எதிர்மனுதாரர், மனுதாரர் மீது காவல்நிலையத்தில் கொடுத்த புகார் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | 06.07.2022 | பொருட்களின் இரசீது – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | -- | எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த முச்சலிக்கா – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.10 | -- | கரூர் கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சம்மன் (4 எண்ணிக்கைகள்) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

K SURESH KUMAR Digitally signed by K SURESH KUMAR Date: 2023.03.31 19:16:02 +0530

சார்பு நீதிபதி,

அவிநாசி.

HMOP.106/2022
Draft/Fair Order
Date: 31.03.2023